கோட்டூர் மருத்துவமனைக்கும் பெண் டாக்டர் நியமிக்கப்படுவார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல், அவருடைய தொகுதியில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமல்ல; மற்ற மருத்துவமனைகள் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும், மருத்துவமனைகளையும் மேம்படுத்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உலக வங்கியினுடைய உதவியை நாடியிருக்கிறார்கள். 650 கோடி ரூபாயை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்திருக்கிறது. அந்தத் தொகை கிடைத்தவுடன் தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், வட்டம்சாரா மருத்துவமனைகள் ஆகிய அனைத்திற்கும், நீங்கள் எதிர்பார்க்கிறபடி அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். அப்புறம் தனியாகப் போய் நன்றி சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், தங்கம், சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வால்பாறையில் மருத்துவர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாததால்தான் அங்கே மருத்துவர்கள் தங்க முடியாமல் இருக்கின்றார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கம், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 69, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

69—

மாணவியர் விடுதி

***20692—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 மார்ச் 25]

திருப்பூரிலுள்ள மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவியர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரிலுள்ள மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம். இந்தப் பின்னலாடைத் தொழிலில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பணி செய்கின்றார்கள். நமது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தொகுதியில் இருக்கின்ற தென் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர்கள்கூடப் பணிக்காக திருப்பூர் வந்து அந்தப் பின்னலாடைத் தொழிற்சாலைகளிலே பணிபுரிகிறார்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாத காரணத்தால், அவர்கள் அங்கே திருப்பூரிலே பணியிடங்கள் காலியிருந்தும்கூட வேலை கேட்டுச் செல்கின்றபோது பயிற்சி இல்லாத காரணத்தினால் வேலை கிடைப்பதற்குச் சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, திருப்பூரிலே இருக்கக்கூடிய மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்காக வெளியூரிலேயிருந்து அங்கே மாணவிகள் வந்தாலும்கூடத் தங்குவதற்கு விடுதி இல்லாத காரணத்தினால், பயிற்சி நிலையம் இருந்தும் மகளிர் பயிற்சி பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த மகளிர் பயிற்சி நிலையத்தில் தென் மாவட்டங்கள் போன்ற தமிழகத்திலே உள்ள பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து பயிற்சி பெறுகின்ற மகளிர்க்காக மகளிர் விடுதி ஒன்றைப் போர்க்கால அடிப்படையில் அரசு அமைக்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் படிக்கின்ற மொத்த மாணவிகளின் எண்ணிக்கை 33 தான்; அனுமதிக்கப்பட்ட இடங்கள் 132. அதில் இப்போது 33 மாணவிகள்தான் படித்துக்கொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் ஒரு ஹாஸ்டலை உருவாக்க வேண்டுமென்றால் 50 பேராவது இருக்க வேண்டும் என்பது மரபு. அந்த அடிப்படையில் இப்போது முதலாம் ஆண்டில் 27 பேரும், இரண்டாம் ஆண்டில் 6 பேரும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த எண்ணிக்கை

கூடுகிறபோது எண்ணிக்கையின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாணவிகளின் அடிப்படையில் கல்லூரியின் முதல்வர் அங்கு ஒரு விடுதி தேவை என்று அரசுக்குப் பிரோரணை அனுப்பினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 70, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம்

***19633—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலை விவசாயிகள் நிறைந்த கபிலர்மலை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் கபிலர்மலை தொகுதியில் அமைப்பதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. அ.இரா. மலையப்பசாமி: நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலே சில ஆண்டுகளுக்கு முன்பாக வெற்றிலை ஆராய்ச்சி மையமானது நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் இலாப நோக்கத்துடன் நடைபெறவில்லை என்ற ஒரு காரணம் கூறி, திருச்சி மாவட்டத்திலுள்ள சிறுகமணிக்கு அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மாற்றி, தற்சமயம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் சிறுகமணியிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆக, தமிழக அரசு இலாப நோக்கத்தை மட்டும் கணக்கில்கொள்ளாமல் இந்த வெற்றிலைச் சாகுபடியை அதிகரித்து நோய்நொடியில்லாத வெற்றிலையை உற்பத்தி செய்து, வெளி மாநிலங்களுக்கு